[1990 மார்ச் 24

9–55 மணி காசிமேடு மீன்பிடித் துறைமுகம்.

*1318—திரு. இரா. மதிவாணன் :

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னை காசிமேடு பகுதியில் மீன்பிடித் துறை முகம் அருகில் மீனவர்களுக்கு விசைப்படகுகள் கட்டுவதற்கு, பிங்கர் ஜட்டியும் (Finger Jetty) மற்றும் மீன் ஏலம் போடு வதற்கு தனித்தனியாக இடமும் ஒதுக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : சென்னை மீன்பிடி துறைமுகத்தில் விசைப்படகுகளின் உபயோகத்திற்கென மூன்று பிங்கர் ஜெட்டி கள் (Finger Jetties) கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. 1580 ச.மீ. பரப்பளவு உள்ள மீன் ஏலமிடும் கூடம் ஏற்கனவே மீன்பிடித் துறைமுக வளாகத்தின் தெற்குப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ளது.

திரு. இரா. மதிவாணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் எந்த ஆண்டிலிருந்து துவங்கப் படும் என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : பேரவைத் தலை வர் அவர்களே, இது துறைமுகப் பொறுப்புக் கழகத்தின் நிர்வாகப் பொறுப்பில் உள்ளது. எனவே அரசின் உயர்மட்டக் குழு ஆய்வு செய்து அதாவது சென்னை மீன்பிடித் துறைமுகத்தில் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகள் குறித்து ஒரு அறிக்கை யைத் தயாரித்து, அதன் அடிப்படையில் 6.6 கோடி ரூபாய் செலவில் ஒரு திட்டத்தைத் தயாரித்து, அந்தத் திட்டம் மத்திய அரசினுடைய ஒப்புதலுக்காகக் காத்துக்கொண்டிருக்கிறது. விரைவில் மத்திய அரசினுடைய ஒப்புதல் கிடைத்துவிடும். அவ்வாறு ஒப்புதல் கிடைத்தவுடன் அந்தத் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. இரா. மதிவாணன் : பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை, ராயபுரம் மீன்பிடித் துறைமுகத்திற்கு வழக்கறிஞரும் பொதுவுடைமைவாதியுமான சிந்தனை சிற்பி சிங்காரவேலர் அவர்களின் பெயரை வைக்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

1990 மார்ச் 24]

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம் பழையாறு துறைமுகத்திற்கு சிந்தனை சிற்பி சிங்காரவேலர் அவர்களுடைய பெயர், இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு சூட்டப்பட்டு இருக்கிறது. ஆனால் சென்னை துறைமுகத்திற்கு சிந்தனை சிற்பி சிங்காரவேலர் அவர்களின் பெயரை வைக்கவேண்டு மென்று நீண்ட நாட்களாகக் கோரிக்கை விடுத்துக்கொண்டிருக் கிறார்கள். ஆனால் அது மத்திய அரசினுடைய பொறுப்பில் இருக்கின்ற காரணத்தால் அவ்வாறு பெயர் சூட்டுகிற பொறுப் பும் மத்திய அரசுக்குத்தான் இருக்கிறது. ஆனால் ஏற்கனவே இருந்த மத்திய அரசு அதனை நிராகரித்துள்ளது. எனினும் உறுப்பினர் அவர்களுடைய கருத்தினைக் கவனத்தில் கொண்டு மத்திய அரசுக்கு இதனைத் தெரிவித்து வலியுறுத்துவோம்.

சின்னமுட்டம் மீன்பிடித் துறைமுகம்

*3057—திரு. மா. சுந்தரதாஸ் :

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கன்னியாகுமரி மாவட்டம், சின்னமுட்டம் மீன்பிடித் துறைமுக வேலை எந்த நிலையில் உள்ளது ?

(ஆ) விரைவாக முடிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) கன்னியாகுமரி மாவட்டம் சின்னமுட்டம் மீன்பிடித் துறைமுகப் பணிகளுள் மேற்கு அலைத்தடுப்புச் சுவர், கிழக்கு அலைத்தடுப்புச் சுவர் ஆகிய இரு பணிகள் நிறைவுற்றுள்ளன. நில சீராக்கப்பணி (Reclamation) மற்றும் கரையோரச் சுவர் (Quay wall) அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. 412 மீட்டர் நீளத்திற்கு கரையோரச் சுவர் அமைக்கப்பட்டுள்ளது.

(ஆ) விரைவாக முடிக்கத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

திரு. செ. நூர்முகமது : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கின்ற பெரும் பான்மையான மீனவர்கள், ஏற்கெனவே இருந்த மீன்பிடித் துறைமுகம் இதுவரையில் செயல்படாத காரணத்தால் கேரள மாநிலத்தில் உள்ள எர்ணாகுளம் போன்ற இடங்களுக்குச் சென்று மீன்பிடிக்க, அங்கேயுள்ள மீனவர்களுக்கும் நம்மவர்களுக்கும் தகராறு ஏற்படக்கூடிய வகையில் பல பிரச்சினைகள் அடிக்கடி உருவாகிக் கொண்டிருக்கின்றன. எனவே, கன்னியாகுமரி மாவட்